# 5 மாதத்துக்கு பிறகு

# மெட்ரோ ரெயிலில் முதல் நாளில் 5 ஆயிரம் பேர் பயணம்

## ஐ.டி. நிறுவனங்கள் முழுமையாக செயல்படாததால் கூட்டம் குறைந்தது

சென்னை, செப். 8–

சென்னையில் மெட்ரோ ரெயில் சேவை 5 மாதங்களுக்கு பிறகு நேற்று தொடங்கியது. வண்ணாரப்பேட்டை– விமான நிலையம் வழித்தடத்தில் மட்டும் சேவை தொடங்கப்பட்டு உள்ளது.

சென்ட்ரல்–கோயம்பேடு – பரங்கிமலை வழித்தடத்தில் நாளை முதல் போக்குவரத்து தொடங்குவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

அரசு துறைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் தற்போது முழுமையாக செயல்பட்டு வரும் நிலையில் மெட்ரோ ரெயிலில் கூட்டம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதற்காக அலுவலக நேரங்களில் காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரை 5 நிமிடத்திற்கு ஒரு ரெயில் வீதம் இயக்கப்பட்டது. மற்ற நேரங்களில் 10 நிமிடத்திற்கு ஒரு ரெயில் சேவை அளிக்கப்பட்டது.

கொரோனா பரவல் காரணமாக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மெட்ரோ ரெயில் வளாகங்களில் எடுக்கப்பட்டிருந்தது. அனைத்து பயணிகளுக்கும் தெர்மல் ஸ்கேனர் பரிசோதனை செய்யப்பட்டது.

### கியூ–ஆர் கோடு

ஊழியர்கள் – பயணிகளிடையே தொடுதல் உள்ளிட்டவைகளை தவிர்க்கும் வகையில் கியூ–ஆர் கோடு முறையில் டிக்கெட் வழங்கப்பட்டது. 32 ரெயில் நிலையங்களிலும் கியூ–ஆர் கோடை பயன்படுத்தி டிக்கெட் பெற வேண்டிய நிலை இருந்தது.

அனைத்து தானியங்கி எந்திரங்களிலும் இந்த முறையில் டிக்கெட் எடுக்க அனுமதிக்கப்பட்டு இருந்தது. ஆனால் எதிர்பார்த்த அளவு கூட்டம் வரவில்லை. அனைத்து ரெயில்களிலும் பயணிகள் மிக குறைந்த அளவில் பயணம் செய்தனர். ஒரு பெட்டியில் 4, 5 பேர் என்ற அளவிலேயே அமர்ந்து இருந்தனர்.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிர்வாக அதிகாரிகள் கூறும்போது, "முதல் நாள் என்பதால் கூட்டம் குறைவாக இருந்தது. இனி படிப்படியாக கூட்டம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம். மின்சார ரெயில்கள் ஓடாததால் மெட்ரோ ரெயிலில் பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. விமான நிலையங்களுக்கு செல்லவும் உதவியாக இருப்பதால் இனிவரும் நாட்களில் கூட்டம் அதிகரிக்கும் என்று நம்புகிறோம்.

நேற்று 5,033 பேர் பயணம் செய்துள்ளனர். இதில் 164 பேர் மட்டும் கியூ.ஆர்.கோடு முறையில் டிக்கெட் பெற்று பயணித்தனர். 4,869 பேர் பயண கார்டுகள் மூலம் சென்றனர். ஐ.டி. நிறுவனங்கள் இன்னும் செயல்படாததால் கூட்டம் குறைவாக இருந்தது. பெரும்பாலானவர்கள் வீட்டில் இருந்து வேலை செய்கிறார்கள். மேலும் விமானங்கள் முழுமையாக இயக்கப்படாததால் பயணிகள் கூட்டம் குறைந்துள்ளது.

மற்றொரு வழித்தடத்தில் ரெயில் இயக்கப்படுவதால் நாளை முதல் பயணிகள் கூட்டம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ரெயில் நிலையங்களில் கூட்டத்தை முறைப்படுத்த ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். கூடுதல் பணியாளர்களுக்காக ரூ.50 லட்சம் செலவு செய்கிறோம்" என்றனர்.